| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள்இயக்குநர்,<br>சென்னை – 600 006. | 1. அனைத்து முதன்மைக் கல்விஅலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2.அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநர்கள் |

**ந.க.எண்.025368 / எச்1 /2022** **நாள் :19.12.2022**

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – 2022–2023ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – +2 பள்ளி மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் மற்றும் TML கட்டணம் – ஆன்லைன் வழியாக செலுத்துதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை எண் 237, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்: 21.09.2007.
2. அரசாணை (நிலை) எண்.68, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை, நாள்:18.11.2021.
3. அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக் கல்வித் (ஜிஇ1)த் துறை, நாள்.11.04.2002.

*****

2022–2023 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களிடமிருந்து (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக் கட்டணத் தொகையினை பெற்று, அத்தொகையினை ஆன்லைன் வழியாக பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி <u>**06.01.2023 – பிற்பகல் 2 மணி முதல் 20.01.2023 – பிற்பகல் 5 மணி**</u> வரையிலான நாட்களுக்குள் செலுத்திட, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

..2..

## தேர்வுக் கட்டணம் (Exam Fees)

| மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒருமாணவருக்கு) |
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.175/– |

**தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:**

| | |
|---|---|
| 1) | பார்வை1–ல் காணும் அரசாணையின்படி தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 2) | கண் பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர் ஆகிய மூன்று வகை மாற்றுத் திறனாளி மாணவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 3) | அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் SC, SCA, SS, ST, MBC/DC இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் (தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயில்பவராக இருந்தாலும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. |
| 4) | • பார்வை 2–ல் காணும் அரசாணையின்படி அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் BC, BCM இனத்தில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.5 இலட்சத்திற்கு (ரூபாய்.2,50,000) குறைவாக உள்ளவர்கள் (எந்த மொழி வாயிலாக பயின்றாலும் – Other than Tamil Medium) தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.<br>• **அரசு உதவி பெறும் (Aided) / பகுதி அரசு உதவி பெறும் (Partly aided) பள்ளிகளில், சுயநிதி பாடத் தொகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட (வரிசை எண்.3 மற்றும் 4–ல் குறிப்பிட்டுள்ள) இந்தத் தேர்வுக் கட்டண விலக்குபொருந்தாது.**<br>• அரசு உதவி பெறும் **(Aided)** / பகுதி அரசு உதவி பெறும் **(Partially aided)** பள்ளிகளில், சுயநிதி பாடத் தொகுப்பில் மாணவர்கள் பயின்று வந்தால் **Partially aided** என்பதனை **Click** செய்து **Exam Fees** செலுத்த வேண்டும் |

<u>முக்கிய குறிப்பு:</u>

- தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானவர்களில், செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோருக்கு மொத்தக் கட்டணமாக ரூ.225/–ற்கும், செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் ரூ.175/– ற்கும் முழுமையாக விலக்களிக்கவேண்டும்.

- **சுயநிதி / மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று +2 பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.**

**<u>+1 Arrear மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணம் செலுத்துதல்</u>**

பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளியில் +2 பயிலும் பள்ளி மாணவர்கள், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான தேர்வினை **(+1 Arrear Subjects)** தற்போது எழுதுவதற்கான தேர்வுக் கட்டணத் தொகையினை சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து பெற்று, அத்தொகையினை **<u>06.01.2023 – பிற்பகல் 2 மணி முதல் 20.01.2023 – பிற்பகல் 5 மணி</u>** வரையிலான நாட்களில் இவ்வலுவலக www.dge1.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, ஆன்–லைன் வழியாக செலுத்துதல் வேண்டும்.

**<u>+1 Arrear தேர்வெழுதுவதற்கானகட்டணம்</u>**

ஒவ்வொருபாடத்திற்கும் ரூ.50/– மற்றும் இதரக் கட்டணம் ரூ.35/–

(உ–ம்)

ஒருபாடம் ரூ.50 + 35 = 85/–

இரு பாடங்கள் = 135
(ரூ.100 + 35 = 135)

**<u>அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் கட்டணம் (TML Fees)</u>**

பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி 2022–2023 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வின் தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்காக, அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) ரூ.300/– செலுத்தவேண்டும்.

<u>ஆன்லைனில் பள்ளித் தேர்வுக் கட்டணம் மற்றும் அட்டவணைப் படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கானகட்டணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்</u>

| | |
|---|---|
| **STEP 1 :** | **www.dge1.tn.gov.in** |
| **STEP 2 :** | **Online Portal for School and Educational Offices** |
| **STEP 3 :** | **School Login (School User ID & Password)**<br><br>**Dashboard Right Hand Side (Notification)** |
| **STEP 4 :** | **Payment for HSC XII**<br>**Or**<br>**Payment for +1 Arrear**<br>**Or**<br>**TML Payment for HSC XII** |

ஆன்–லைன் மூலமாக கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக ஒருங்கிணைப்பாளரை (Co-ordinators) தொடர்பு கொள்ளலாம்.

மேற்படி, தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களையும், 2022–2023–ஆம் கல்வியாண்டு மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் (Exam Fees), அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலுக்கான கட்டணம் (TML Fees) ஆகியவற்றினை ஆன்–லைன் வழியாக செலுத்திட அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

<u>நகல்</u>

1. அனைத்து மாவட்டக் கல்விஅலுவலர்கள்
2. அ3 பிரிவு (அலுவலகம்) –தொடர் நடவடிக்கைக்காக.